தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.09.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3708/F/2023**

திருமதி.மு.பராசக்தி, -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ),
உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், -- பொது அதிகார அமைப்பு
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

******

**இறுதிஆணை**

இவ்வாணையம் 21.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.மணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.எஸ்.ஜெகதீசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆகியோர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு தகவல்கள் ந.க.எண்.ஆ2/1716/2026, நாள் 27.08.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் விரைவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் Tracking Consignment-ன் நகல் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கம் ஆகியவற்றினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்கள். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3708/F/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ),
உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (28.11.2022 தேதிய)**
**திரு.எஸ்.ஜெகதீசன்,**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),**
**வட்டார வளர்ச்சி அலுவலகம்,**
**உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திருமதி.மு.பராசக்தி,
1/78B, தெற்கு தெரு,
எஸ்.மலையனூர் கிராமம்,
உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 107.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

உதவி இயக்குநர்,(ஊராட்சிகள்),
உதவி இயக்குநர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-